ஏற்போர் ஆம் என்க. (ஆம்)
மறுப்போர் இல்லை என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம்.
தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஆ) கோரிக்கை எண் 50-சுற்றுலா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண். 50—சுற்றுலா. வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப் பெறவில்லை. பழனிசாமி, சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

சுற்றுலா பற்றிய 50ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 2,15,18,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டுமென்னும்மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க (ஆம்).
மறுப்போர் இல்லை என்க (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம்.
தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

9. அறிவிப்பு

உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இப்பேரவையின் உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி கைது செய்யப்பட்டு சென்னை சிறைச்சாலையிலே இருந்தவர், சென்னைப் பெருநகர 13ஆம் மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்ட்டிரேட் உத்திரவின் காரணமாக ஜாமீனில் நேற்று மாலை விடுவிக்கப்பட்டார் என்கிற தகவல் எனக்கு வந்துள்ளது என்பகதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 6—4—1993, செவ்வாய்க்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.